www.Padasalai.Net www.CBSEtips.in

12 R

Register No. 12A017

# காலாண்டுத் தேர்வு – 2023

மணி : 3.00

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள் : 90

பகுதி – I

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.
14 x 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. 'தமிழ் அழகியல்' என்னும் நூலின் ஆசிரியர்
அ) தி.சு. நடராஜன் ஆ) பாரதியார் இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) பரலி சு. நெல்லையப்பர்
3. தமிழில் திணைப்பாகுபாடு.........அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
4. உத்தம சோழன் "கிழக்கு வாசல் உதயம்" என்ற திங்களிதழை எத்தனை ஆண்டுகளாக நடத்தி வருகிறார்?
அ) 14 ஆ) 17 இ) 12 ஈ) 18
5. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் அ) கம்பராமாயணம் ஆ) இராமாவதாரம் இ) இராமகாதை ஈ) கம்ப நாடகம்
6. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
7. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம் அ) சென்னை ஆ) கன்னியாகுமரி இ) வேலூர் ஈ) மதுரை
8. 'வித்யாரம்பம்' என்பது.........அ) கல்விப் பயிற்சி ஆ) எழுத்துப்பயிற்சி இ) கல்வித் தொடக்கம் ஈ) பின்ன எண்ணின் மேல்தொகை
9. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
10. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்
11. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர்
அ) திருநாவுக்கரசர் ஆ) திருஞானசம்பந்தர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
12. படிமம் என்பதன் பொருள் அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
13. 'சாய்வு நாற்காலி' என்னும் புதினம் யாருடையது?
அ) அப்துல் ரகுமான் ஆ) தோப்பில் முகமது மீரான் இ) புதுமைப்பித்தன் ஈ) கல்கி
14. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

பகுதி – II பிரிவு – 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' விளக்கம் தருக.
17. 'இடையீடு' எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
18. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக.
20. கீழ்த்திசை சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. பேரிடர் மேலாண்மை ஆணையம் பற்றி எழுதுக.

பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுது. தலை, தளை, தழை
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவையை தெரிந்துகொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
24. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க : தாமரை
25. ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொல்லை எழுதுக. 1) Departure 2) Arrival
26. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
27. இலக்கணக் குறிப்பு தருக. 1) வெங்கதிர் 2) வெரீஇய
28. புணர்ச்சி விதி தருக. 1) இனநிரை 2) தனியாழி
29. பகுபத உறுப்பிலக்கணம் தருக 1) கலங்கி 2) உயர்ந்தோர்
30. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞரைக் கண்டுபிடி.
சிறுகதை ஆசிரியர், முதல்பாதி நவீனம்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பகுதி – III பிரிவு – 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
34. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

### பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. பண்டைக்காலக் கல்விமுறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் எழுதுக.
37. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக.
38. சென்னையின் பண்பாடும் அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பவற்றைக் குறிப்பிடுக.

### பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. **(அல்லது)**
ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவி கூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி
– கண்ணதாசன்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
அ) ஊழி பெயரினும் தாம் பெயரார் **(அல்லது)**
ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை
42. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
1) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.
2) இன்னிக்கு சாயங்காலம் கபடிபோட்டி நடைபெறும்.
3) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
4) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது.
43. தமிழாக்கம் தருக.
1) A new language is a new life.
2) If you want people to understand you, speak their language.
3) Knowledge of languages is the doorway to wisdom.
4) The limits of my language are the limits of my world.

## பகுதி – IV

அனைத்து வினக்களுக்கும் விடை தருக. 3 x 6 = 18

44. அ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.
**(அல்லது)**
ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.
45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
**(அல்லது)**
ஆ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது எவ்வாறு? விளக்குக.
46. அ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" – இது குறித்து உங்கள் கருத்தை விளக்குக.
**(அல்லது)**
ஆ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

## பகுதி – V

அடிபிறழாமல் எழுதுக. 4 + 2 = 6

47. அ) குகனோடு ஐவர்............எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
ஆ) 'கடும்' என முடியும் குறள்.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com